டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 25.02.2026 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 204 - Madurai | Online Edition

# 2026-27 பருவத்திற்கு பதப்படுத்தப்படாத சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புது தில்லி, பிப்.24

2026-2027 சந்தைப் பருவத்திற்கு பதப்படுத்தப்படாத சணலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

2026-2027 சந்தைப் பருவத்திற்கு பதப்படுத்தப்படாத சணலுக்கான (டிடி-3 வகை) குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.5,925 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உற்பத்திச் செலவைவிட குறைந்தபட்சம் ஒன்றரை மடங்கு அதிகமாக குறைந்தபட்ச ஆதரவு விலை இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டிற்கு இணங்க இந்த விலை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.

2025-2026 சந்தைப் பருவத்தைவிட தற்போது குவிண்டாலுக்கு ரூ.275 அதிகரிக்கப்பட்டுள்ளது.



# உரம், பூச்சி மருந்து விதை விற்பனை செய்ய உரிமம் பெற வேண்டியதற்கான பட்டயப் படிப்பு துவக்க விழா



பெரம்பலூர், பிப்.24

பெரம்பலூர் மாவட்டத்தில் வாலிகண்டபுரத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் ஆய்வு மையம், ஹைதராபாத்தில் உள்ள மேனேஜ் நிறுவனம் மற்றும் குடுமியான் மலையில் உள்ள சமிதி ஆகியவைகள் மூலம் இந்த பட்டய படிப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக சமிதி இயக்குனர் டாக்டர் சங்கரலிங்கம், கலந்து கொண்டு வருகை புரிந்த மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள பல தகவல்கள் மற்றும் பட்டய படிப்பிற்கு தேவையான அறிவுரைகளையும் வழங்கினார். வேளாண்மை அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர், வசந்த் குமார் சிறப்புரை ஆற்றினார். முனைவர் பொன் விழி ரம்யா ஒருங்கிணைப்பாளர், அனைவரையும் வரவேற்றினார்.

வேளாண்மை உதவியை இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, எளிதாக புரியும்படி இந்த பட்டயப் படிப்பின் நோக்கம், எவ்வாறு செயல்பட்டு விவசாயிகளுக்கு உதவி செய்திட வேண்டும் மற்றும் வேளாண்மை தொழில் நுணுக்கங்களுடன் சிறப்பாக முதல் வகுப்பு தொடங்கி வைத்தார். மேலும் வேளாண்மை துணை இயக்குனர் எப் டி சி இந்திராணி, கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். வேளாண்மை விற்பனை மற்றும் வணிகம் வேளாண்மை அலுவலர் செண்பகம் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். விதை சான்று அலுவலர் ராஜேந்திரன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இளநிலை வேளாண் பொறியாளர் சர்மிளா கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மற்றும் தந்தை ரோவர் கல்வி நிறுவனங்களின் நிர்வாக அலுவலர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இந்த வகுப்பில் 40 மாணவர்கள் பட்டய படிப்பிற்காக கலந்து கொண்டனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெற சிறப்பு முகாம் : வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

திருச்சி, பிப்.24

திருச்சிராப்பள்ளி மாவட்ட விவசாயிகள் பிரதம மந்திரியின் தனித்துவ அடையாள எண் பெற வசதியாக 26.02.26 வரை சிறப்பு முகாம் நடைபெற உள்ளதாக வேளாண்மை இணை இயக்குநர், பூ.வசந்தா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது, மாவட்டத்தில் விவசாயிகள் மொத்தம் 1 லட்சத்து 83 ஆயிரத்து 115 பேர் உள்ளனர். இதில் 1 லட்சத்து 29 ஆயிரத்து 174 பேர் பிரதம மந்திரியின் தனித்துவ அடையாள எண் பெற்றுள்ளனர். இம்மாவட்டத்தில் இன்னும் 53,941 பேர் தனித்துவ அடையாள எண் பெறாமல் உள்ளனர்.

பிரதம மந்திரி கிசான் திட்டத்தின் கீழ் கவுரவ நிதி பெறும் விவசாயிகள் மத்திய அரசு வழங்கும் தனித்துவ அடையாள எண் பெறுவது கட்டாயம் என்பதால் உடனடியாக விவசாயிகள் பதிவு செய்ய வசதியாக சிறப்பு முகாம் நடைபெற உள்ளது.

இந்த சிறப்பு முகாமானது வரும் 26.02.26 வரை நடைபெற உள்ளது. எனவே, மாவட்ட விவசாயிகள் தங்களுடைய நிலத்தின் கணினி சிட்டா, ஆதார் எண், ஆதார் எண்ணுடன் இணைக்கப் பட்ட கைப்பேசி எண் ஆகியவற்றுடன் அருகில் உள்ள இ-சேவை மையம் அல்லது அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு பதிவு செய்ய கேட்டுக்கொண்டார்.

எனவே, திருச்சிராப்பள்ளி மாவட்ட விவசாயிகள் இந்த சிறப்பு முகாமை பயன்படுத்தி தனித்துவ அடையாள எண் பெற்று பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# நஞ்சில்லாமுறை விவசாயத்தால் 25% விளைச்சலும் வருமானமும் அதிகரித்துள்ளது!

கன்னியாகுமரி, பிப்.24

நஞ்சில்லாமுறை விவசாயத்தால் இருபத்தைந்து சதவீதம் விளைச்சலும் இருபத்தைந்து சதவீதம் வருமானமும் அதிகரித்து உள்ளது.



கன்னியாகுமரி மாவட்டம், காஞ்சிரம்பாறை, நிரப்பு, ஆனைகுளம், முல்லப்பூ காணி, செறுகடத்து காணி, கீழ்மலை, தோலடி, ஆகிய கிராமங்களை சேர்ந்த 200 நஞ்சில்லாமுறை சிறு குறு விவசாயிகளுக்கு பயிர் வளர்ச்சி ஊக்கிகள் தயார் செய்யும் 210 லிட்டர் டிரம், 50 லிட்டர் டிரம், தார்பாலின், உயிர் உரமான சூடோமோனஸ் 1 கிலோ வீதம் வழங்கும் நிகழ்ச்சி ஒரு நூறாம்வயல் கிராமத்தில் நடந்தது. ரூரல் அப்லிப்ட் சென்டர் செயலாளரும் வழக்கறிஞருமான பு.மரிய ஜேம்ஸ் தலைமை வகித்து டிரம்கள், தார்பாலின், சூடோமோனஸ் ஆகியவற்றை 200 நஞ்சில்லாமுறை சிறுகுறு விவசாயிகளுக்கு வழங்கினார். தலைமையுரையில் மண்வளம் பெறுவதற்கான தொழில் நுட்பங்களை பயிர் வளர்ச்சி ஊக்கிகள், பூச்சி மற்றும் நோய் தடுப்பு முறைகள் குறித்து பயிற்சிகளை கற்றுக் கொண்ட விவசாயிகள் அதனை சொந்தமாக தயார் செய்ய வேண்டும். அனைத்து விவசாயிகளும் நஞ்சில்லாமுறையில் பயிர் செய்யும் விவசாயிகள் என்ற சான்றிதழ் பெறவேண்டும் என்றார். மேலும் கடந்த 4 வருட நஞ்சில்லாமுறை சிறு குறு விவசாயிகளுக்கான பணியின் ஆய்வின்படி இருபத்தைந்து சதவீதம் வருமானமும் இருபத்தைந்து சதவீதம் விளைச்சலையும் 700 விவசாயிகள் பெற்றுள்ளனர் என தெரிய வந்துள்ளது என்றார்.

நஞ்சில்லாமுறை விவசாய பயிற்சியின் திட்ட ஒருங்கிணைப்பாளர் கலைவாணி பேசுகையில் 700 சிறு குறு விவசாயிகளுக்கு 4 வருட காலமாக கம்போஸ்ட் உரங்கள், வளர்ச்சி யூக்கிகள், மூலிகை பூச்சிவிரட்டிகள், நுண்ணுயிர் கலவை உரங்கள்,

கலவை உரங்கள், திறன் நுண்ணுயிர் கரைசல், நுண்ணுயிர் பூச்சி விரட்டிகள் ஆகியவற்றை பயன்படுத்தி இரசாயன உரம் மற்றும் இரசாயன பூச்சிகொல்லிகள் இல்லாமல் விவசாயிகள் நஞ்சில்லாமுறையை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் இரசாயன உரச்செலவு குறைந்து வருமானமும் விளைச்சலுமம் 25 சதவீதம் அதிகரித்துள்ளளதாக கூறினார். சிறப்பு விருந்தினராக ஆறுகாணி காவல் துறை ஆய்வாளர் கலந்து கொண்டார். நிகழ்ச்சியில் துவக்கமாக ஒரு நூறாம்வயல் கிராமசபை தலைவர் ஏ.அனில்குமார் வரவேற்புரை ஆற்றினார். இந்த 4 வருட பயிற்சியின் விளைவுகளை நஞ்சில்லாமுறை விவசாயி சஞ்சு பகிர்ந்து கொண்டார். தன்னார்வ பணியாளர்கள் விஜயன், அம்பிகா, ஜெயகுமார், அம்பிளி நஞ்சில்லாமுறை விவசாய பயிற்சியாளர் கிறிஸ்டோபர், பணியாளர் முத்துகுமார் ஆகியோர் நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் சுமார் ஐநூறு நஞ்சில்லாமுறை சிறு குறு விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# தக்காளி இலை சுருட்டு நோய் குறித்து பயிற்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்



திண்டுக்கல், பிப்.24

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் (AC & RI) பயிலும் மாணவர் மனு பிரதீப், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டாரம், பெரியகோட்டை கிராமத்தில் தக்காளி இலை சுருட்டு நோய் குறித்து பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினார்.

இந்நிகழ்ச்சியில் நோயின் காரணங்கள், பரவல் முறை மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# வேளாண் மாணவிகள் தேங்காய் டானிக் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம்



சிவகங்கை, பிப்.24

சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு, வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவிகள் கிராம விவசாயிகளுக்காக தேங்காய் டானிக் பயன்பாடு குறித்து செய்முறை விளக்கம் நடத்தினர். இந்நிகழ்ச்சி வாணியம்பட்டி கிராமத்தில் நடைபெற்றது. இதில் பலர் கலந்து கொண்டு ஆர்வத்துடன் பயனடைந்தனர். மாணவிகள், தேங்காய் மரங்களில் அதிக மகசூல் பெறவும், காய்களின் தரத்தை மேம்படுத்தவும் தேங்காய் டானிக் முக்கிய பங்காற்றுகிறது என்று விளக்கினர். தேங்காய் டானிக் என்பது நுண்ணூட்டச்சத்துகள், வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் உயிர்ச்சத்துகள் கொண்ட திரவ உரமாகும். இது மரத்தின் வேர் வளர்ச்சியை அதிகரிக்கவும், பூத்தல் மற்றும் காய் கட்டுதல் சதவீதத்தை உயர்த்தவும் உதவுகிறது.

## தேங்காய் டானிக் பயன்பாடுகள்

தேங்காய் மரங்களில் பூ உதிர்வு குறைவு. காய் கட்டுதல் மற்றும் காய் எண்ணிக்கை அதிகரிப்பு. மரத்தின் நோய் எதிர்ப்பு சக்தி உயர்வு. காய்களின் எடை மற்றும் தரம் மேம்பாடு. வறட்சியை தாங்கும் திறன் அதிகரிப்பு.

## பயன்படுத்தும் முறை

விவசாயிகள் 6 மாதத்திற்கு ஒருமுறை மரத்தின் வயதிற்கு ஏற்ப 200 மில்லி முதல் 500 மில்லி வரை டானிக் பயன்படுத்தலாம். மரத்தின் வேர் பகுதிக்குச் சுற்றிலும் 10-15 செ.மீ ஆழத்தில் சிறிய குழி செய்து, அதில் டானிக்கை ஊற்றி பின்னர் மண்ணால் மூட வேண்டும். சிறந்த விளைவைப் பெற மழைக்கால தொடக்கத்தில் அல்லது பாசனத்திற்குப் பிறகு பயன்படுத்துவது நல்லது என மாணவரவிகள் தெரிவித்தனர்.

மேலும், இயற்கை முறையில் தயாரிக்கப்படும் இந்த டானிக், மண்ணின் ஆரோக்கியத்தை பாதுகாத்து நீண்டகால மகசூலை உறுதி செய்யும் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். விவசாயிகள் இத்தகவலை வரவேற்று, தங்கள் தோட்டங்களில் இதனைப் பயன்படுத்த உறுதியளித்தனர்.

இந்நிகழ்ச்சி விவசாயிகளுக்கும் மாணவரவிகளுக்கும் இடையே அறிவு பரிமாற்றத்தை ஏற்படுத்தியதுடன், நிலையான வேளாண்மை வளர்ச்சிக்கான ஒரு முக்கியமான படியாக அமைந்தது.



# பரிசோதனைக்கு எவ்வளவு விதைகள் தேவை?

தேனி, பிப்.24

தரமான விதையை உரிய காலத்தில் வினியோகித்ததால் மட்டுமே உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளோம். பரிசோதனையின் மூலம் விதைகளின் தரம் நிர்ணயிக் கப்படுகிறது. விதைத்தரத்திற்கு உட்பட்டு சான்றளிப்புக்கு ஏற்றது தானா என கண்டறியலாம். அதற்கேற்ப விலையை நிர்ணயிப்ப தால் நுகர்வோர் தரம் அறிந்து பெற முடியும். விதைச்சட்டம் அமலாக்கத்திற்கு பயன்படுகிறது.

வயலில் இருந்து கிடைக்கும் விதைகளில் மண், சிறுகற்கள், இலைத்துகள்கள், குச்சி மற்றும் பொக்கு விதைகள் கலந்து இருக்கும். இவற்றை சுத்திகரிக்க வேண்டும். புறத்தூய்மை என்பது குறிப்பிட்ட பயிர் விதையைத் தவிர பிற பயிர், களை விதைகள் இருக்கக்கூடாது. இனத்தூய்மை என்பது தாயாதிப் பயிரின் மரபியல் குணங்களை விதைகள் ஒத்திருக்க வேண்டும். இதனால் அதிக விளைச்சலும், வம்சாவழியின் குணங்களும் கிடைக்கும். கரு, வல்லுனர் விதைகள் 100%, ஆதார விதை 99.5%, சான்று விதை 99% சதவீதம் இனத்தூய்மை கொண்டிருக்க வேண்டும்.

நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதைகளை விதைத்தால் பயிர் எண்ணிக்கை அதிகரிக்கும். விதைச்சட்டம் 1966 பிரிவு 7ன் படி ஒவ்வொரு பயிருக்கும் முளைப்புத் திறன் சதவீதம் வேறு படும். நெல், எள்ளில் 80 சதவீதம் முளைப்புத்திறன் இருக்க வேண்டும். சரியான ஈரப்பத நிலையில் உள்ள விதைகளை பூச்சி, பூஞ்சாண தாக்குதல் இன்றி நீண்ட நாட்கள் சேமிக்கலாம். நீண்டகால சேமிப்புக்கு 8%, அதற்கு குறைவான கால சேமிப்புக்கு 10-13% சதவீத ஈரப்பதம் இருக்க வேண்டும். விதை மாதிரிகளை எடுத்து அந்தந்த மாவட்டங்களில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் தரலாம்.

தேனி விற்பனைக்குழு அலுவலக வளாகத்தில் இம்மையம் செயல்படுகிறது. வீரிய விதைகளின் விலை அதிகம் இருப்பதால் பரிசோதனைக்கு தேவையான அளவு விதைகளை மட்டும் அனுப்பினால் பண இழப்பை தவிர்க்கலாம்.

வெங்காயம், காரட், நூல்கோல், காலிபிளவர், முட்டைக்கோஸ், தக்காளி ரகம், ஒட்டு ரகம், மிளகாய், கத்தரி, டர்னிப் விதைகள் 10 கிராம் பரிசோதனைக்கு கொண்டு வந்தால் போதும், கேழ்வரகு, கம்பு, எள் 25 கிராம், நெல், கீரை, பீட்ரூட், முள்ளங்கி, சணப்பு 50 கிராம். வெள்ளரி, உளுந்து, பூசணி, வெண்டை, பாசிப்பயறு, கொள்ளு, சோளம், தர்பூசணி, சூரிய காந்தி ரகம் மற்றும் ஒட்டுரகம், சுரை, சீனி அவரை, பருத்தி ஒட்டு பஞ்சு நீக்கியது 100 கிராம், துவரை, தட்டைப்பயறு, பீர்க்கு, சோயா பீன்ஸ், பருத்தி ரகம் பஞ்சு நீக்கியது 150 கிராம். பருத்தி ஒட்டு பஞ்சு உள்ளது 200, புடல், பட்டாணி, ஆமணக்கு, பாகல் 250 கிராம், பருத்தி ரகம் பஞ்சு உள்ளது 350கிராம், கொண்டக்கடலை, கொத்த மல்லி 400 கிராம், பிரெஞ்சு, அவரை 450 கிராம் மற்றும் நிலக்கடலை, மக்காச்சோளம் 500 கிராம் விதைகளை மட்டும் அனுப்பினால் பரிசோதனை செய்து தரப்படும். விதையின் தரம் அறிய ஒரு விதைமாதிரிக்கு ஆய்வுக் கட்டணமாக ரூ.80/- செலுத்த வேண்டும். தரமான விதைகளை பரிசோதித்து விதைத் தால் விளைச்சலும் அதிகரிக்கும்.

தகவல் : **ம.சதீஷ், ஜெ.மகிசா தேவி, வேளாண்மை அலுவலர்கள், சி.சிவகாமி, விதைப்பரிசோதனை அலுவலர், சுக்குவாடன்பட்டி, தேனி.**

# ஒட்டன்சத்திரம் வீரலபட்டியில் ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து பயிற்சி



மதுரை, பிப்.24

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இளங்கலை பட்டம் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர் ரா.சிலுவை ஜெனா ஊரக வேளாண்மை பணி அனுபவ திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் குழுவில் பயிற்சி பெற்று வருகிறார். இதன் ஒரு பகுதியாக, ஒட்டன்சத்திரம் வீரலப்பட்டி கிராமத்தில், விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் ஒருங் கிணைந்த பண்ணையம் கட்டமைப்பு முறை, நன்மைகள் மற்றும் கழிவுகளை கையாள்வது குறித்து பயிற்சி அழிக்கப்பட்டது. பின்னர் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப் பட்டன. இதில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# விவசாயிகளுக்கு கிசான் கிரெடிட் கார்டு விழிப்புணர்வு பயிற்சி

திண்டுக்கல், பிப்.24

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அடுத்த கொல்லப்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கு கிசான் கிரெடிட் கார்டு (KCC) குறித்த பயிற்சி நடைபெற்றது.



மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவர் செல்வ அஸ்வின் செ, தனது ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக இந்தப் பயிற்சியை ஒருங்கிணைத்து நடத்தினார்.

இப்பயிற்சியில் கிசான் கிரெடிட் கார்டு திட்டத்தின் முக்கிய அம்சங்கள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

**குறிப்பாக :**

**குறைந்த வட்டி கடன் :** விவசாயிகள் தங்களின் சாகுபடி செலவுகளுக்காக வங்கிகள் மூலம் மிகக் குறைந்த வட்டியில் கடன் பெறுவது எப்படி?

**பயன்கள் :** உரங்கள், விதைகள் வாங்குவதற்கும், அறுவடைக்குப் பிந்தைய செலவுகளுக்கும் இத்திட்டம் எவ்வாறு கைகொடுக்கிறது என்பது குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

**விண்ணப்பிக்கும் முறை :** இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தேவையான ஆவணங்கள் (பட்டா, சிட்டா, ஆதார் அட்டை) மற்றும் வங்கிகளில் விண்ணப்பிக்கும் நடைமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு நேரடி விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சியில் கொல்லப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரளான விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டனர். முறையான கடன் வசதிகளைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வேளாண் கழிவிலிருந்து 'பயோ செங்கல்' தயாரிப்பு



சமீப காலமாக வேளாண் கழிவுகளை பயனுள்ள மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றப்பட்டு வருகிறது. அதற்கான தொழில்நுட்பங்கள் உலகெங்கும் உருவாகி வருகின்றன. இந்த வகை யில் நமது நாட்டின் தலை சிறந்த ஐ.ஐ.டி. நிறுவனங்களில் ஒன்றான ஐதராபாத் ஐ.ஐ.டி நிறுவனம் தான் இந்த பயோ செங்கல்களை உருவாக்கி உள்ளது. அதுமட்டுமல்ல முழுக்க முழுக்க இந்த பயோ செங்கற்களைக் கொண்டு ஒரு கட்டிடத்தை தங்களுடைய வளாகத்தில் நாட்டிலே முதன்முறையாக கட்டிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

## வேளாண் கழிவிலிருந்து செங்கல்

பொதுவாக வேளாண் கழிவுகளை நம்முடைய மக்கள் தீயிட்டு எரிக்க தான் ஆசைப்படுகின்றனர். இதனால் காற்று மாசுபடுவதுடன் சுற்றுப்புற சுழலும் பாதிக்கப்படுகிறது. சுவாசிக்க முடியாத நிலையில் தான் காற்றின் தரம் உள்ளது. இதனை உணர்ந்த ஐ.ஐடி நிர்வாகம் வேளாண் கழிவில் பயோ செங்கலை தயாரிக்க முடியும் என்பதை உலகிற்கு நிருபித்து காட்டியதோடு மட்டுமல்லாது அதற்கான காப்புரிமையை (COPY RIGHT - PATTERNS) பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பயோ செங்கலின் சிறப்பு தன்மை

1) முழுக்க முழுக்க தாவரக்கழிவிலிருந்து உருவானது.

2) மற்ற செங்கல் மண் & கான்கீரிட் கற்களை விட இந்த கற்கள் எடை மிக மிக குறைவானது.

3) உறுதி தன்மை மற்ற கற்களை போல இருக்கும்.

4) கையாளுவது எளிதாகும்.

5) விலை மிக குறைவு, சாரசரியாக ஒரு பயோ செங்கற்களின் விலை 3 மட்டுமே.

6) வேளாண்கழிவுகள் கிடைக்குமிடத்திலே தயாரிக்க முடியும். இதனால் விவசாயிகளுக்கு கூடுதலான வேலைவாய்ப்பும் வருமானமும் கிடைக்கும்.

7) கழிவுகள் குறித்து அச்சப்பட வேண்டியதில்லை. அதனை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்ற முடியும்.

8) கட்டுமானங்களில் எளிதாக பயன்படுத்தலாம்.

எனவே வேளாண் கழிவுகளை (வைக்கோல், தட்டை, பருத்தி, மார்) போன்றவற்றை நிலத்திலே மடக்கி உழது மண் வளத்தை உருவாக்கியது போல வாய்ப்புள்ள இடங்களில் இதனை பயோ செங்கற்கள் தயாரிக்க பயன்படுத்துவோம். இதற்கான தொழில் நுட்பத்தை ஐதராபாத் ஐ.ஐ.டி வாயிலாக தெரிந்து கொள்ளு வோம்.

கழிவுகளையும் காசாக்கலாம் என்ன நீங்க ரெடியா?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# தொல்லுயிர் கரைசல் தயாரிப்பு குறித்த பயிற்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவி



தேனி, பிப்.24

தேனி மாவட்டம், கூடலூரில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் தொல்லுயிர் கரைசல் தயாரிப்பு குறித்த பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியை மதுரை வேளாண்மை கல்லூரி மாணவி ஷப்னா ஆஸ்மி மு. முன்னெடுத்து விவசாயிகளுக்கு செய்முறை விளக்கத்துடன் வழங்கினார். பயிற்சியில் மண் வளத்தை அதிகரிக்கும் இயற்கை உரங்களின் அவசியம், இரசாயன உரங்களுக்கு மாற்றான முறைகள் மற்றும் தொல்லுயிர் கரைசலின் பயன்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தயாரிப்பு முறைகளை நேரடியாக கற்றுக்கொண்டனர்.

**தேவையான பொருட்கள்**

50 லிட்டர் கொள்ளளவு உள்ள டிரம், மாட்டுச் சாணம் – 5 கிலோ, பப்பாளி பழம் – 3 கிலோ, வெல்லம் – 250 கிராம், அதிமதுரம் பொடி – 25 கிராம், கடுக்காய் பொடி – 25 கிராம், தண்ணீர் – 50 லிட்டர்

**தயாரிப்பு முறைகள்**

★ மாட்டுச் சாணத்தை தண்ணீரில் நன்கு கரைத்து டிரம்மில் ஊற்ற வேண்டும். வெல்லம், கடுக்காய் பொடி மற்றும் அதிமதுரம் பொடி ஆகியவற்றை தனியாக தண்ணீரில் கரைத்து டிரம்மில் சேர்க்க வேண்டும்.

★ பப்பாளி பழத்தின் மேல் தோலை நீக்கி, அதனை கூழாக்கி டிரம்மில் சேர்க்க வேண்டும்.

★ பின்னர் தேவையான அளவு தண்ணீர் சேர்த்து டிரம்மை நிரப்ப வேண்டும்.

★ டிரம்மை இறுக்கமாக மூடி 10 நாட்கள் நன்கு நொதிக்க விட வேண்டும்.

★ முதல் அல்லது இரண்டாம் நாளில் டிரம்மில் மீத்தேன் வாயு

உருவாகி, டிரம் உப்பிய நிலையில் காணப்படும். அப்போது மூடியை சிறிது திறந்து மீத்தேன் முழுமையாக வெளியேறச் செய்ய வேண்டும்.

★ பின்னர் மீண்டும் மூடி அதே நிலையில் வைக்க வேண்டும்.

★ பத்து நாட்கள் கழித்து தொல்லுயிர் கரைசல் தயாராகிவிடும்.

**பயன்படுத்தும் முறை**

★ மாதம் 1 அல்லது 2 முறை, ஏக்கர் ஒன்றுக்கு 200 லிட்டர் தொல்லுயிர் கரைசலை பாசன நீரில் கலந்து பயன்படுத்தலாம்.

★ 10 லிட்டர் தண்ணீரில் 1 லிட்டர் தொல்லுயிர் கரைசல் கலந்து தெளிப்பு முறையிலும் பயன்படுத்தலாம்.



# தென்னை மரங்களில் போர்டியாக்ஸ் பேஸ்ட் பயன்படுத்தும் முறைகள் குறித்து வேளாண் கல்லூரி மாணவர்கள் விளக்கம்



நாமக்கல், பிப்.24

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவர்கள் தங்களது கிராமப்புற அனுபவப் பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளை சந்தித்து பல்வேறு தொழில் நுட்பங்களைப் பகிர்ந்து வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் எலச்சிப்பாளையம் பகுதியில் உள்ள தென்னை விவசாயிகளை சந்தித்து தென்னை மரங்களில் "போர்டியாக்ஸ் பேஸ்ட்" (Bordeaux paste) பயன்படுத்தும் முறைகள் குறித்து விரிவான விளக்கங்களை வழங்கினர்.

தென்னை மரங்களில் காணப்படும் காய்ச்சல், தண்டு சிதைவு, பூஞ்சை நோய்கள் போன்றவற்றை கட்டுப்படுத்த போர்டியாக்ஸ் பேஸ்ட் சிறந்த தடுப்பு முறையாக பயன்படுகிறது என்று மாண வர்கள் எடுத்துரைத்தனர். குறிப்பாக தண்டு பகுதியில் ஏற்படும் புண்கள் மற்றும் சிதைவுகளை சுத்தம் செய்து அதன் மீது போர்டி யாக்ஸ் பேஸ்ட் தடவுவது நோய் பரவலைத் தடுக்க உதவுகிறது. இதன் மூலம் மரத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியும், விளைச்சல் அதிகரிப்பும் உறுதியாகும் என விளக்கப்பட்டது.

போர்டியாக்ஸ் பேஸ்ட் தயாரிக்கும் முறையாக, 1 கிலோ காப்பர் சல்பேட் (Copper sulphate) மற்றும் 1 கிலோ சுண்ணாம்பை தனித்தனியாக கரைத்து பின்னர் இரண்டையும் கலந்து கெட்டியான பேஸ்ட் போல் தயாரிக்க வேண்டும் என செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. மரத்தின் பாதிக்கப்பட்ட பகுதியை கூர்மையான கருவியால் சுத்தம் செய்து, பின்னர் இந்த பேஸ்டை தடவி, உலர விட வேண்டும்.

மழைக்காலத்திற்கு முன்பாகவும், நோய் அறிகுறிகள் தென்படும் சமயங்களிலும் இதை பயன்படுத்துவது சிறந்தது என அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட விவசாயிகள் மாணவர்களின் விளக்கத்தை ஆர்வமுடன் கேட்டறிந்து, தங்கள் தோட்டங்களில் இம்முறையைப் பயன்படுத்தத் தயாராக இருப்பதாக தெரிவித்தனர். இத்தகைய களப்பயிற்சிகள் மூலம் விவசாயிகளுக்கு அறிவியல் அடிப்படையிலான தொழில்நுட்பங்கள் எளிய முறையில் சென்றடைவது குறிப்பிடத்தக்கது.

# இயற்கை உரம் பற்றிய களப்பயிற்சியை நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.24

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டாரத்தில் அமைந்துள்ள PGP கல்லூரி மாணவர்கள் இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் மோர் மூலம் தயாரிக்கப்படும் இயற்கை உரம் பற்றிய களப்பயிற்சியை நடத்தினர். இந்த நிகழ்ச்சியை வேளாண்மை துறை மாணவர்கள் ஒருங்கிணைத்து நடைமுறை விளக்கத்துடன் செயல்படுத்தினர். இந்நிகழ்ச்சியில், மோரைக் கொண்டு இயற்கை உரம் தயாரிக்கும் முறையை மாணவர்கள் நேரடி செய்முறை மூலம் விளக்கினர்.

புளித்த மோர் செடிகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களை கட்டுப்படுத்தும் திறன் கொண்டதாகும் என்று தெரிவித்தனர். மேலும், எவ்வளவு அளவில் நீருடன் கலக்க வேண்டும், எப்போது தெளிக்க வேண்டும் போன்ற தொழில்நுட்ப தகவல்களையும் வழங்கினர்.

இந்த களப்பயிற்சியின் மூலம் குறைந்த செலவில், சுற்றுச் சூழலுக்கு ஏற்ற இயற்கை உள்ளீடுகளைப் பயன்படுத்தி விவசாயம் செய்யும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சி கிராமப்புற இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றது.

# மினி வேளாண் கண்காட்சி நடத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.24

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் நாமக்கல் மாவட்டம், கரட்டுப்பாளையத்தில் மினி வேளாண் கண்காட்சி சிறப்பாக நடத்தினர், கரட்டுப் பாளையத்தில் மாணவர்கள் நடத்திய மினி வேளாண் கண்காட்சி மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இக்கண்காட்சியில் புதுமையான மற்றும் பாரம்பரிய வேளாண் முறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு பொதுமக்களுக்கு விளக்கமாக காட்சிப்படுத்தப்பட்டது.

இந்தக் கண்காட்சியின் முக்கிய அம்சமாக இரவு வேளாண்மை முறை (Night Farming Model) அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்து, விலை சங்கிலி நிஜ நிலை முறை (Price Chain Reality Model) மூலம் விவசாயப் பொருட்கள் உற்பத்தியாளரிடமிருந்து நுகர் வோரிடம் செல்லும் வரை இடைநிலையாளர்களின் பங்கு மற்றும் விவசாயிகளுக்கு கிடைக்கும் விலை பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது. இது விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும்.

செங்குத்து நீர்ப்பாசன ஹைட்ரோபோனிக்ஸ் முறை (Hydroponics in Vertical Farming) பொதுமக்களின் கவனத்தை அதிகம் ஈர்த்தது. பூச்சி குழப்ப முறை (Pest Confusion Model) மூலம் இரசாயன மருந்துகள் இல்லாமல், உயிரியல் முறையில் பூச்சிகளை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப் பட்டன. பெண்கள் வழிநடத்தும் வேளாண் முறை (Women-led Agricultural Model) மூலம் பெண்களின் பங்கு மற்றும் சுயஉதவி குழுக்களின் செயல்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டது.

மேலும், பட்டுப்பூச்சி வளர்ப்பு அலகு (Sericulture Unit) மாதிரி, பாரம்பரிய கொட்டை கட்டுதல் முறை ஆகியவை காட்சிப்படுத்தப் பட்டன. இதன் மூலம் பாரம்பரிய அறிவும் நவீன தொழில்நுட்பமும் ஒன்றிணைந்த வேளாண்மை முறைகள் வலியுறுத்தப்பட்டன. கண்காட்சியில் பல்வேறு நெல் வகைகள் மற்றும் திரவ உரங்கள் சேகரித்து காட்சிப்படுத்தப்பட்டன.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# பங்கேற்பு மதிப்பீடு செய்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



சிவகங்கை, பிப்.24

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரம், கிழவயல் கிராமத்தில், செட்டிநாடு வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மாணவர்கள் கிராமப்புற பணித் திட்டத்தின் (Rural Work Experience Programme) ஒரு பகுதியாக 11.02.26 அன்று கிராமப்புற மக்களின் பங்கேற்பு மதிப்பீடு (Participatory Rural Appraisal - PRA) செயல்பாட்டை மேற்கொண்டனர்.

இச்செயல்பாட்டின் முக்கிய நோக்கம், கிராம மக்களின் நேரடி பங்கேற்பின் மூலம் கிராம வளங்கள், சமூக அமைப்பு, வாழ்வாதார முறைகள் மற்றும் விவசாய சூழ்நிலைகளை முழுமையாக அறிதல் ஆகும். மேலிருந்து திட்டமிடும் அணுகுமுறைக்கு பதிலாக, மக்களின் அனுபவமும் கருத்துகளும் அடிப்படையாகக் கொண்டு தகவல் சேகரிப்பதே PRA செயல்முறையின் அடிப்படை நோக்கமாகும்.

**செயல்முறை :**

மாணவர்கள் முதலில் கிராம மக்களுடன் கலந்துரையாடல் (Focused Group Discussion) நடத்தினர்.

அதன் பின்னர் PRA கருவிகள் பயன்படுத்தப்பட்டன :

**சமூக வரைபடம் (Social Mapping)** - கிராம வீடுகள், தெருக்கள், சமூக வசதிகள், பொதுக்கட்டிடங்கள் ஆகியவற்றை அடையாளப் படுத்துதல்.

**வள வரைபடம் (Resource Mapping)** - விவசாய நிலங்கள், கிணறுகள், குளங்கள், கால்வாய்கள், மாடுகள் மற்றும் இயற்கை வளங்கள் குறித்த தகவல் சேகரித்தல்.

**நில பயன்பாட்டு ஆய்வு** - பாசன மற்றும் மழை சார்ந்த நிலங்கள், முக்கிய பயிர்கள் பற்றிய விவரங்கள்.

**தொழில் மற்றும் வாழ்வாதார மதிப்பீடு** - விவசாயம், கால்நடை வளர்ப்பு, கூலி வேலை போன்ற முதன்மை மற்றும் துணை தொழில்கள்.

**சிக்கல் பகுப்பாய்வு** - தண்ணீர் பற்றாக்குறை, உள்ளீட்டு செலவு உயர்வு, சந்தை விலை மாறுபாடு போன்ற விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்.

**பெறப்பட்ட தகவல்கள்**

கிராமத்தின் பெரும்பாலான மக்கள் விவசாயத்தை முதன்மை தொழிலாகக் கொண்டுள்ளனர். மழை சார்ந்த விவசாயமே அதிகமாக காணப்படுகிறது. சில பகுதிகளில் கிணறு மற்றும் போர்வெல் மூலம் பாசன வசதி உள்ளதெனவும் அறியப்பட்டது. முக்கியமாக பயிரிடப்படும் பயிர்கள், கால்நடை வளர்ப்பு நிலை மற்றும் உற்பத்தி சவால்கள் குறித்து மக்களிடமிருந்து விரிவான தகவல்கள் பெறப்பட்டன.

**மக்களின் பங்கேற்பு**

இந்த நிகழ்வில் கிராம மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது அனுபவங்கள், தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தினர். பெண்கள் மற்றும் வயதான விவசாயிகளும் கலந்துகொண்டு பயனுள்ள கருத்துகளை பகிர்ந்தனர். இதன் மூலம் சமூக ஒற்றுமை மற்றும் கூட்டு முடிவெடுக்கும் மனப் பான்மை வெளிப்பட்டது.

**கல்வி மற்றும் சமூக பயன்**

இந்த PRA செயல்பாடு மாணவர்களுக்கு கிராம வாழ்க்கை முறைகள், விவசாய சூழ்நிலைகள் மற்றும் சமூக அமைப்பை நேரடியாக அறிந்து கொள்ளும் வாய்ப்பை வழங்கியது. மேலும், மக்களுடன் இணைந்து செயல்படும் திறன், தொடர்பு திறன் மற்றும் சமூகப் பொறுப்பு உணர்வு ஆகியவை மேம்பட்டன.

**முடிவு :** மொத்தத்தில், கிழவயல் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட PRA செயல்பாடு, கிராமத் திட்டமிடல் மற்றும் வள மேலாண் மையில் மக்களின் பங்கேற்பின் முக்கியத்துவத்தை வலியுறுத் தும் வகையில் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. இது நிலை யான வளர்ச்சிக்கான அடித்தளத்தை உருவாக்கும் ஒரு சிறந்த முயற்சியாக கருதப்படுகிறது.

# பாசிப்பயறு விதை நேர்த்தி ட்ரைக்கோடெர்மா மூலம் செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்




மதுரை, பிப்.24

மதுரை மாவட்டம், சூரக்குண்டு பகுதியில், மதுரை வேளாண்மை கல்லூரி மாணவர் தமிழ்செல்வன் (Tamilselvan), பாசிப்பயிரில் ஏற்படும் மண் வழி நோய்கள் (வேர் அழுகல், தண்டு அழுகல் போன்றவை) கட்டுப்படுத்தும் நோக்கில், விவசாயிகளுக்கு ட்ரைக்கோடெர்மா (Trichoderma) மூலம் பாசிப்பயறு விதை நேர்த்தி குறித்த செயல்விளக்கப் பயிற்சி வழங்கினார். இந்த செயல்விளக்கம் 3.2.26 அன்று நடைபெற்றது.

பாசிப்பயிரில் நோய் தாக்கம் ஏற்படும் காரணங்கள், ட்ரைக்கோடெர்மாவின் முக்கியத்துவம், விதை நேர்த்தி செய்யும் முறை மற்றும் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மையில் (IDM) இதன் பங்கு குறித்து விரிவாக விளக்கப்பட்டது.

**ட்ரைக்கோடெர்மா விதை நேர்த்தி நோக்கம்**

- மண்வழி நோய்களை கட்டுப்படுத்துதல்
- விதை முளை திறனை அதிகரித்தல்
- ஆரம்ப வளர்ச்சியை மேம்படுத்துதல்
- ரசாயன பூஞ்சைக் கொல்லி பயன்பாட்டை குறைத்தல்

**செயல்விளக்க விவரம் – Trichoderma விதை நேர்த்தி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பரிந்துரைகளின் படி,

- ட்ரைக்கோடெர்மா கலவையின் அளவு
- விதையுடன் கலக்கும் முறை
- நிழலில் உலர்த்தும் முறை
- விதைப்பு செய்வதற்கான சரியான நேரம்

### இந்த செயல்விளக்கத்தின் நன்மைகள்

- மண்வழி நோய் தாக்கம் குறையும்
- ஆரோக்கியமான நாற்றுகள் உருவாகும்
- பயிர் வளர்ச்சி மேம்படும்
- சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும்
- மகசூல் மற்றும் தரம் அதிகரிக்கும்

மதுரை வேளாண்மை கல்லூரி மாணவர் தமிழ்செல்வன் ம, இந்த செயல்விளக்கத்தை எளிமையாகவும் பயனுள்ளதாகவும் நடத்தியது சூரக்குண்டு பகுதி விவசாயிகளிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது.



# கிராமம் நோக்கி அரசுத் திட்டங்கள் – எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவி



தேனி, பிப்.24

தேனி மாவட்டம், கம்பம் வட்டாரத்தில் அமைந்துள்ள உத்தமபுரம் கிராமத்தில், விவசாயிகளுக்கான வேளாண்மை அரசுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த பயிற்சியை மதுரை வேளாண்மை கல்லூரி மாணவி வர்சா மற்றும் அவரது குழுவினர் நடத்தினர். இந்நிகழ்ச்சியில் தமிழக அரசின் முக்கிய வேளாண்மை வளர்ச்சி திட்டங்களான தமிழ்நாடு பாசன நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP), தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் (NADP), தென்னை வளர்ச்சி திட்டம், வாழை வளர்ச்சி திட்டம், நுண்ணீர்ப்பாசன மானியத் திட்டம், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான உதவித் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு அரசுத் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

பயிற்சியின் போது, திட்டங்களில் சேர்வதற்கான தகுதி விதி முறைகள், விண்ணப்பிக்கும் நடைமுறை, வழங்கப்படும் மானியத் தொகை மற்றும் திட்டங்களின் பயன்கள் குறித்து தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக உத்தமபுரம் பகுதியில் முக்கியமாக பயிரிடப்படும் நெல், வாழை, தென்னை மற்றும் காய்கறிப் பயிர்களுக்கு ஏற்ற அரசுத் திட்டங்கள் குறித்து எடுத்துக்காட்டு களுடன் விளக்கம் வழங்கப்பட்டது.

மேலும், மண் வள மேலாண்மை, நீர் சேமிப்பு முறைகள், குறைந்த செலவில் அதிக விளைச்சல் பெறும் நவீன வேளாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் விவசாய வருமானத்தை உயர்த்தும் வழிமுறைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சி நிகழ்ச்சியில் உத்தமபுரம் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த பல விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இத்தகைய பயிற்சிகள் விவசாயிகள் அரசுத் திட்டங்களை முழுமையாக பயன்படுத்த உதவுவதுடன், கம்பம் வட்டார வேளாண்மை வளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரியும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

# ராஜதானிகோட்டை கிராமத்தில் கொய்யா மரத்தில் விண் பதியம் செய்தல் குறித்த செயல்விளக்கம்



மதுரை, பிப்.24

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், ஒத்தக்கடை, மதுரையைச் சேர்ந்த இறுதியாண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் மாணவி அ.பாலதர்ஷினி, நிலக்கோட்டை வட்டார ராஜதானிகோட்டை கிராமத்திலுள்ள விவசாயிகளிடம் கொய்யா மரத்தில் விண் பதியம் (Air Layering) முறையில் இனப்பெருக்கம் செய்வது குறித்த செயல்விளக்கம் அளித்தார்.

அதில், உயர் தரமான தாய் மரத்திலிருந்து ஒரு வருட வயதுடைய பென்சில் தடிமன் கொண்ட கிளையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று விளக்கினார். அக்கிளையில் கத்தியால் 2 செ.மீ நீளத்திற்குப் பட்டையை நீக்கி, அந்த இடத்தில் ஈரமான தென்னை நார் கழிவு அல்லது பாசி போன்ற வளர்ச்சி ஊடகத்தை வைத்து பிளாஸ்டிக் காகிதத்தால் காற்று புகாதவாறு இருபுறமும் நூலால் கட்ட வேண்டும். இவ்வாறு செய்வதால் 45 முதல் 60 நாட்களில் புதிய வேர்கள் தோன்றும் என்றும், அதன் பிறகு கிளையைத் தாய்ச்செடியிலிருந்து பிரித்து நடவு செய்யலாம் என்றும் விவரித்தார். இம்முறையில் உருவாகும் செடிகள் குறுகிய காலத்தில் பலன் தரும் மற்றும் தாய் மரத்தின் குணங்களை அப்படியே கொண்டிருக்கும் என்று எடுத்துரைத்தார். இப்பயிற்சியின் இறுதியில் விவசாயிகளுக்கு இது குறித்த துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டு, அவர்களின் சந்தேகங்களுக்குப் பதிலளிக்கப்பட்டது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
Rithvik Pipe
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741